# ஆயர் மடல்.........

கிறிஸ்துவுக்குள் அன்பான CSI Tamil Parish, AlAin விசுவாச குடும்பங்களுக்கு,

கிறிஸ்துவின் கிருபை உங்களில் நாளுக்கு நாள் பெருகுவதாக. உங்கள் மத்தியிலே தேவனுடைய ஊழியத்தை செய்வது என்பது தேவனுடைய அழைப்பாக, தேவனுடைய அனாதி திட்டமாக விசுவாசத்தோடு ஏற்றுக் கொண்டிருக்கிறேன். ஆதலால் தேவனுக்கு பிரியாமன தேவனுடைய ஊழியத்தை நிறைவேற்றும் ஒரு ஊழியமாக, அனேகருக்கு பக்தி விருத்தி விசுவாச வளர்ச்சிக்கு உதவுகிற ஒரு ஊழியமாக, அனேகருக்கு ஆறுதலையும், தேறுதலையும் ,ஆற்றலையும், சமாதானத்தையும், சந்தோஷத்தையும் தருகிற ஊழியமாக, தேவ ராஜ்யத்தின் எல்லைகளை விரிவு படுத்துகிற ஒரு ஊழியமாக, பெலவீனரைத் தாங்கி பெலப்படுத்துகிற ஊழியமாக, காணமல் போன ஆடுகளை கண்டு பிடிக்கும் வரை தேடி ஒப்புரவாக்குகிற ஒரு ஊழியமாக, எல்லாவற்றிற்கும் மேலாக புதிய ஆத்துமாக்களை திருச்சபையிலே அனுதினமும் சேர்க்கிற ஊழியமாக, அலையினிலுள்ள தமிழ் திருச்சபையின் ஒட்டு மொத்த வளர்ச்சியை தரிசனமாகக் கெண்டு, விசுவாசத்தோடும், பயபக்தியோடும், ஜெபத்தோடும், உண்மையோடும், எந்த விதமான பாகுபாடின்றி பணியாற்றுவேன் என்பதை இந்த ஆயர் மடல் மூலம் அறிவிக்கிறேன்.

நான் வந்தது முதல் உங்களுடைய உபசரிப்பினால், அன்பான விசாரிப்பினால் உள்ளம் சந்ரோதஷத்தினால்

நிறைந்திருக்கின்றது. நிர்வாக குழுவினுடைய முழு ஒத்துழைப்பும் உதவியும் பேரன்பும் என்னை ஊழியத்தில் உற்சாகப் படுத்தியிருக்கிறது.கர்த்தர் உங்கள் ஒவ்வொரு குடும்பங்களின் தேவைகளை அற்புதமாய் சந்திப்பாராக. உங்கள் போராட்டம் சவால் நிறைந்த சூழலில் தலையிட்டு உங்களுக்கு உதவி செய்வாராக.


கிறிஸ்துவின் பணியில் உங்கள் ஆயர்

Rev.M. Christopher Rajendran.

csitcalain@gmail.com

056 7105082


## தியானப் பகுதி

**அப்போஸ்தலர் நடபடிகள் 2: 42- 44 தியான வசனம்: 42,46**

அன்புக்குரியவர்களே!

ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவின் நாமத்திலே உங்களை வாழ்த்துகிறேன். நாம் 21ம் நூற்றாண்டு திருச்சபையாக, நவீன கால திருச்சபையாக இருந்தாலும் ஆதி அப்போஸ்தல திருச்சபையின் "சில குணாதிசயங்களை" நம்முடைய வாழ்க்கை சூழலுக்கு ஏற்ப கடைபிடிப்பதில் தவறில்லை. அப்படிப்பட்ட திருச்சபையின் குணாதிசயங்கள் நடைமுறை (Corporate Life)க்கு ஒத்து வரா விட்டாலும், ஒரு சில அடிப்படை சத்தியங்களை தியானித்து, உள்வாங்கி, கற்றுக் கொண்டு அப்பியபசப் படுத்தினால் திருச்சபை ஒட்டு மொத்த வளர்ச்சியின் பாதையில் பயணிக்கும் என்பதில் எந்த வித சந்தேகமும் இல்லை.

அதித்திருச்சபையின் புதிய விசுவாசிகள் மத்தியில் தேவனுடைய பிரசன்னம் பலமாய் நிரூபிக்கப்பட்டுக் கொண்டிருந்தது. Visible and Tangible manifestation of the presence of God was proved to the Believers. 43ம் வசனத்தின் படி அப்போஸ்தலர் மூலமாக உயிர்த்தெழுந்த இயேசுவை நேரில் பார்ப்பது போல ஆதித்திருச்சபை விசுவாசிகள் தங்கள் கண்களால் பார்த்தார்கள்.

43ம் வசனத்தின் படி பரிசுத்த பயத்தினாலும் பயபக்த்தியினாலும் (awe) மிகுந்த சந்தோஷமும் சமாதானமும் தொற்று நோயைப் போல பரவியதன் விழைவு தான் விசுவாசிகளுக்குள் வந்த ஒருமனம் (Unity). Sharing everything even food and property. இது எதைக் காட்டுகிறது என்றால் ஆதித்திருச்சபை விசுவாசிகள் தேவனுடைய பிரசன்னத்தினால் நிறைந்து "தெய்வீக அன்பை கொண்டாடினார்கள். அல்லது தேவனையே கொண்டாடினார்கள். They were celebrating God Himself. ஆதலால் 42ம் வசனத்தின் படி உறுதியாய் தரித்திருந்தார்கள். எங்கே ஒரு திருச்சபை தேவனையே மையமாக வைத்து அவரை கொண்டடாடுகிறதோ அங்கே ஒருமனம், விசுவாசம், தன்னலமற்ற தெயவீக அன்பின்(Agape) வெளிப்பாடுகளை நாம் காண முடியும்.. ஒவ்வொரு கால கட்ட திருச்சபை வரலாற்றிலும் திருச்சபையின் எழுப்புதலை பரிசுத்த ஆவியானவர் கொண்டு வருவார். காரணம் அவர் தான் இயேசுவை, அவருடைய சத்தியத்தை பலமாய் நிரூபிக்கிறவர். ஆவர் நமது திருச்சபையில் "இயேசுவை" நிரூபிக்க நாம் அவருக்கு இடம் கொடுத்தால் 47ம் வநனத்தின்படி திருச்சபையாய் ஒட்டு மொத்த வளர்ச்சியின் பாதையிலே பயணிப்போம்.

கிறிஸ்துவின் பணியில் உங்கள் ஆயர்
Rev.M. Christopher Rajendran.

# நன்றி

நமது திருச்சபையின் மாத இதழான "மன்னா" பத்திரிகையின் இம்மாத செலவினை முழுமையாக ஏற்றுக் கொண்ட **திரு. ஜேசன் சாமுவேல்** குடும்பத்தினருக்கு திருச்சபையின் சார் பில் நன்றியை தெரிவித்துக் கொள்கிறோம். இந்த ஆன்மீக பத்திரிகை வழியாக வரும் எல்லா தேவ ஆசீர்வாதங்களும் இக்குடும்பத்தாருக்கு நிறைவாய் இருப்பதாக.

# செயலரிடமிருந்து........

கிறிஸ்துவுக்குள் எனக்கு மிகவும் அன்பான உடன் விசுவாசிகளே, இயேசு கிறிஸ்துவின் இணையற்ற நாமத்தில் உங்கள் யாவருக்கும் என் அன்பின் வாழ்த்துக்களை கூறிக்கொள்கிறேன். கடந்த ஒரு மாத காலமாக தேவனுடைய கிருபை நம்மோடிருந்து நம்மை ஆசீர்வதித்து வழி நடத்தி இந்த புதிய மாதத்தை காணச்செய்த தயவை நினைத்து நம் உள்ளத்தின் ஆழத்திலிருந்து தேவனுக்கு துதி செலுத்துவோம்.

கடந்த ஜீன் மாதம் 9 ம் தியதி முதல் நமது திருச்சபையின் ஊழியத்தை ஏற்று நடத்தும் வண்ணமாக நம்மோடு இணைந்தி ருக்கும் போதகர். மா. கிறிஸ்டோபர் ராஜேந்திரன் (Rev.M.Christopher Rajendran) அவர்களை ஒருமுறை கூட திருச்சபையின் சார்பிலே வரவேற்றுக் கொள்வதில் மகிழ்ச்சி அடைகிறேன். அவர்கட்காக ஜெபிப்போம். அவர்கட்கு நம் மத்தியிலே கொடுக்கப்பட்ட மூன்று வருட ஊழிய நாட்கள் நம் ஒவ்வொருவரின் தனிப்பட்ட வாழ்கைக்கும் நம் திருச்சபைக்கும் ஆசீர்வாதமாக அமைய ஜெபிப்போம். நாம் யாவரும் சபையாக அவர்களோடு இணைந்து செயல் படுவோம். திருச் சபையின் வளர்ச்சிக்காக ஒன்று பட்டு ஜெபத்தோடு கூட உழைப்போம்.

கடந்த மாதம் 16 ம் தியதி நமது Junior Church பிள்ளைகட்கான தேர்வுகள் நடந்து முடிந்தது. தொடர்ந்து வரும் நாட்கள் கோடை விடுமுறை நாட்களாக இருப்பதால் இந்த நாட்களில் Junior Church நடைபெறாது. மீண்டுமாக Junior Church ஆரம்பிக்கும் தியதி பின்னர் அறிவிக்கப்படும். வரும் நாட்களில் நமது திருச் சபையின் எல்லா ஊழியங்களும் தொடர்ந்து நடைபெறும். அதற்கான அறிவிப்பகள் ஏற்ற வேளைகளில் சபையாருக்குத் தரப்படும். திருச்சபையின் வளர்ச்சிக்காக செயல் படுத்தும் ஒவ்வொரு ஊழியங் களிலும் இன்னும் மற்ற காரியங்களிலும் நாம் யாவரும் உற்சாகத் தோடும், ஜெபத்தோடும்

பங்கு பெறுவோம், செயல்படுவோம். தேவன் தாமே நம்மையும் நம் திருச்சபையையும் ஆசீர்வாதத்தின் பாதையில் வழி நடத்துவாராக.

***M. நேசமணி***

# மாம்சத்தின் கிரியைகள்

**மாம்சத்தின் கிரியைகளினால் வருகிற பாவங்களை பவுல் கீழ்கண்ட நான்கு பகுதிகளாக பட்டியலிடுகிறார்.**

**1. விபச்சார பாவங்கள்:**
(கலா: 5:19) மாம்சத்தின் கிரியைகள் வெளியரங்கமாயிருக்கின்றன, அவை விபச்சாரம், வேசித்தனம், அசுத்தம், காமவிகாரம்.

**2. மத சம்மந்தமான பாவங்கள்:**
(கலா. 5:20) விக்கிரகாராதனை, பில்லிசூனியம்,பகைகள், விரோதங்கள் வைராக்கியங்கள், கோபங்கள் சண்டைகள், பிரிவினைகள், மார்க்கபேதங்கள்.

**3. சமுதாய பாவங்கள்:**
(கலா: 5:20-21) விக்கிரக ஆராதனை, பில்லிசூனியம், பகைகள், விரோதங்கள், வைராக்கியங்கள், கோபங்கள், சண்டைகள், பிரிவினைகள், மார்கபேதங்கள், பொறாமைகள், கொலைகள், வெறிகள், களியாட்டுக்கள் முதலானவைகளே, இப்படிப் பட்டவை களைச் செய்கிறவர்கள் தேவனுடைய ராஜ்யத்தைச் சுதந்தரிப்பதில்லை.

**4. மதுபானத்தில் வரக்கூடிய பாவங்கள்:**
(கலா:5:21). போறாமைகள், கொலைகள், வெறிகள், களியாட்டுகள் இவைகளை செய்கிறவர்கள் தேவனுடைய இராஜியத்தில் பிரவேசிப்பது இல்லை என பவுல் கூறுகிறார்.

இப்படிப்பட்ட மாம்சத்தின் கிரியைகளை நம்மையும் நம் சமுதாயத்தையும் விட்டு அகற்ற தேவ ஆவியானவர் நமக்கு உதவி புரிவாராக.

**நெல்சன் சோபித ராஜ்.**

# What does it mean for God to be my shepherd?

# Psalm 23

One of the most popular psalms in the Bible is Psalm 23 written by King David. Before David was a mighty king, he was a humble shepherd boy, and his job was to make sure they didn't wander off or get eaten by predators. But how does this passage about a shepherd and his sheep, relate back to our relationship with God? To answer this question, we'll break down this Psalm piece by piece:

## Green Pastures and Peaceful Streams

***The LORD is my shepherd; I shall not want. He makes me lie down in green pastures. He leads me beside still waters. He restores my soul. He leads me in paths of righteousness for his name's sake.*** **Psalm 23:1-3**

Every sheep needs food and safety, but they don't know how to get there. That's why a shepherd is in charge of leading sheep to green meadows where they can graze and to peaceful streams where they can drink (Psalm 23:1-2). We as God's children are the sheep. God knows our every need, and while we don't always see it in the moment, He is making our paths clear so all our needs are fulfilled (Psalm 23:3; Philippians 4:19).

## Valley of the shadow of death

***Even though I walk through the valley of the shadow of death, I will fear no evil, for you are with me; your rod and your staff, they comfort me.* Psalm 23:4**

Dark valleys are a dangerous place for sheep to wander off (Psalm 23:4). They are separated from the flock and much more vulnerable to predators. Hardships, whether it be with friends, school, or unexpected tragedies, can make us feel like lost, lonely sheep. God can seem distant from our problems and us, which makes us susceptible to fear and despair. However there is no need to worry.

God our shepherd will always guide his sheep, in times of fear and despair. Christians can be confident in the assurance that He is always with them, leading the way.

## Prepares a table in the presence of my enemies

***You prepare a table before me in the presence of my enemies; you anoint my head with oil; my cup overflows.* Psalm 23:5**

God invites us as a guest to His very own table (Psalm 23:5). There's nothing more exciting than a delicious feast of your favorite mouthwatering foods. A good meal always leaves us happy and well nourished. Even our sufferings cannot overcome the promises of God's love, provision and protection, which leave us peaceful and satisfied. We can be confident witnesses to other Christians who are suffering, reminding them of the assurance of God's compassionate character and His ultimate gift of generosity of His own Son Jesus.

# Goodness and Mercy

***Surely goodness and mercy shall follow me all the days of my life, and I shall dwell in the house of the LORD forever.*** **Psalm 23:6**

David closes Psalm 23 with a reflection of God's promise. David is confident that God will never leave him or forsake him, for he is confident in the compassionate character of God. Goodness and mercy is God's steadfast love, which is the assurance for Christians that God has indeed given His people an oversupply of grace. This psalm prepares the way to show the ultimate act of God's steadfast love, in giving his Son as the sacrificial lamb, who took away all our sins, enabling all wayward sheep to live with God forever in heaven (Isaiah 53:6).

**Compiled**

## திருமறை அறிவுப் போட்டி –ஜுலை - 2017

(அதிகாரங்கள் 1இராஜாக்கள் 1அதி முதல் 11வரை)

1. பெனாயாவினால் கொலை செய்யப்பட்டவர்கள் யார்?
2. மரவெட்டு தொழில் அறிந்தவர்கள் யார்?
3. உடன்படிக்கைப் பெட்டியில் இருந்தவை எவை?
4. இருப்புக் காளவாய் எது?
5. சாலொமோனின் மனைவி தங்கியிருந்த இடம் எது?
6. அகிமாஸின் மனைவி பெயர் என்ன?
7. சாலொமோனின் மணியக்காரர்களின் வேலை என்ன?
8. தேவாலயத்தின் வாசல் எம்மரங்களினால் செய்யப்பட்டது?

9. சாலொமோன் தன் அரண்மனையை எத்தனை வருடத்தில் கட்டி முடித்தான்?

10. சாலொமோனுக்குப் பின் இஸ்ரவேலை அரசாண்ட ராஜா யார்

## ஜுன்-2017 சரியான விடைகள்

1. சத்துருக்கள் (சங். 5:8,9)
2. ராஜாக்களுக்கு (சங். 2:10)
3. எளியவன் (சங். 9:18)
4. பெருமூச்சு (சங். 6:6)
5. கர்த்தருடைய வேதத்தில் தியானமாயிருக்கிற மனுஷன் (சங். 1:2,3)
6. பாவம் (சங். 4:4)
7. கர்வம் (சங். 10:4)
8. சிங்கத்திற்கு (சங். 7:2)
9. கர்த்தர் (சங். 3:8)
10. கர்த்தருடைய கரத்தின் கிரியைகள் (சங். 8:6)

## ஜுன்- மாத வேத வினா விடைப்போட்டி - விடைகள் எழுதியவர்கள்::

1. திருமதி. ஜெயின் ராஜவேல்
2. திருமதி. பிப்லின் நெல்சன்.
3. திருமதி. ஜோனஷ் ஹெர்சில்
4. திருமதி. ஷீபா பிரகாஷ்
5. திருமதி. ஜெயந்தா ஜாண்

### கடந்த மாதம் விடுபட்டவர் பெயர்கள்

Children:

1. S.Jesvin Bose
2. B.Johan Sanjo
3. R.Dennis Roger

Adult:

1. திருமதி. ஜெயந்தா ஜாண்
2. திருமதி. ஷீபா பிரகாஷ்

# A BEAUTIFUL PRAYER

*O God, I thank You for this day of life*
***for eyes** to see the sky*
***for ears** to hear the birds*
***for feet** to walk amidst the trees*
***for hands** to pick the flowers from the earth*
***for a sense** of smell to breathe in the sweet perfumes of nature*
***for a mind** to think about and appreciate the magic of everyday miracles*
***for a spirit** to swell in joy at Your mighty presence everywhere*

# Children's Page


Cartoon of the Month




Fix these words of mine in your hearts and minds; tie them as symbols on your hands and bind them on your foreheads.
— Deuteronomy 11:18 NIV

## LORD

Enlighten what's dark in me,
Strengthen what's weak in me,
Mend what's broken in me,
Bind what's bruised in me,
Heal what's sick in me,
And lastly,
Revive whatever peace and love
has died in me.
Amen.




Last Month's Answer: **"You have sat on your throne judging"**


## Children who found the Correct Answer..

1. S. Jesvin Bose
2. Annlin Sophia Nelson
3. Angelin Sophia Nelson
4. R. Dennis Roger
5. Mercy Deva Prakash.

***Well Done Children***

# Bible crossword for kids

## The Book of Genesis
## Chapters 3 and 4




Copyright 2002 - by Bill Walters Publications

more puzzles at http://biblewordgames.com

## Down

(2) Adam's second son
(3) Cain's first son (Gen.4:17)
(4) Adam's first son
(6) Adam's third son
(7) What creature tempted Eve
(8) Cain lived in this land
(10) First man
(12) First woman

## Across

(1) Cain's occupation (Gen.4:2)
(5) The _____ of Eden
(6) Adam and Eve's first clothes(Gen.3:21)
(9) Because of sin the ground was _______ (Gen.3:17)
(11) Abel's occupation (Gen.4:2)
(13) Cain became a ______ and a vagabond (Gen.4:12)

# It's a Holiday Time and
# PLAN YOUR TRAVEL...

**1. ACCOMMODATION**

Arrangements for first-class accommodation have been made in advance.

"In My Father's house are many rooms........ . I am going there to prepare a place for you." (John 14:2).

**2. PASSPORTS**

Persons seeking entry will not be permitted past the gates without having proper papers/credentials and having their names registered with the ruling Authority.

"Nothing impure will ever enter it, nor will anyone who does what is shameful or deceitful, but only those whose names are written in the Lamb's book of life". (Revelation 21:27).

**3. DEPARTURE TIMES**

The exact date of departure has not been announced. Travelers are 21 advised to be prepared to leave at short notice.

"It is not for you to know the times or dates the Father has set by His own authority." (Acts 1:7).

**4. TICKETS**

Your ticket is a written pledge that guarantees your journey. It should be claimed and its promises kept firmly in hand.

"I tell you the truth; whoever hears My word and believes Him who sent Me has eternal life and will not be condemned; he has crossed over from death to life." (John 5:24).

**5.. CUSTOM**

Only one declaration is required while going through customs. "That if you confess with your mouth, ' Jesus is Lord,' and believe in your heart that God raised Him from the dead, you will be saved." (Romans 10:9).

**6. IMMIGRATION**

All passengers are classified as immigrants, since they are taking up permanent residence in a new country. The quota is unlimited. "......... they were longing for a better country - a heavenly one ........ He has prepared a city for them." (Hebrews 11:16).

**7. LUGGAGE**

No luggage whatsoever is necessary. "For we brought nothing in to the world, and we can take nothing out of it." (1 Tim6:7).

**8. AIR PASSAGE**

Travelers' going directly by air are advised to watch daily for indications of imminent departure.

"After that, we who are still alive and are left will be caught up together with them in the clouds to meet the Lord in the air. And so we will be with the Lord forever." (1 Thessalonians 4:17).

**9. VACCINATION AND INOCULATION**

Injections are not needed, as diseases are unknown at the 22 destination. "He will wipe every tear from their eyes.
There will be no more death or mourning or crying or pain..." (Rev21:4)

**11. CURRENCY**

Supplies of currency may be forwarded ahead to await the passenger’s arrival.

Deposit your heart, mind, soul and life."But store up for your selves treasures in heaven, where moth and rust do not destroy, and where moth and rust do not destroy, and where thieves do not break in and steal." (Matthew 6:20).

**12. CLOTHING**

A complete and appropriate new wardrobe is provided for each traveler.

"...For He has clothed me with garments of salvation and arrayed me in a robe of righteousness. ..." (Isaiah 61:10).

**12. TIME CHANGES**

Resetting of watches will not be necessary to adjust to the day/night schedule.

"The city does not need the sun or the moon to shine on it, for the glory of God gives it light, and the Lamb is its lamp........ for there will be no night there." (Revelations 21:23, 25).

**13. RESERVATIONS**

Booking is now open. Apply at once. ".....now is the time of God's favor, now is the day of salvation." (2 Corinthians 6:2)

**Compiled**

# BIRTHDAY CELEBRANTS JULY 2017

| Date | Name | Contact |
|---|---|---|
| 01-07-2017 | Mr.A.Ravichandran | 056 641 1363 |
| 05-07-2017 | Mr.P.David Raj | 050 832 8013 |
| 05-07-2017 | Mrs.Jessy Beulah John | 056 763 6127 |
| 05-07-2017 | Master. Sachin Verald | 050 116 1530 |
| 07-07-2017 | Mrs.Hepsibai Nesamony | 050 523 7237 |
| 10/-07-2017 | Master.Eric Jayden | 056 257 8373 |
| 14-07-2017 | Mr.Jason Samuel | 056 257 8373 |
| 17-07-2017 | Mrs.Bavani Selvakumar | 050 838 6851 |
| 19-07-2017 | Mrs.Sangeetha Ujinraj | 056 272 5446 |
| 20-07-2017 | Mrs.Asha Julie Flora | 050 112 8766 |
| 23-07-2017 | Mr.Ravindra | 056 885 2900 |
| 28-07-2017 | Mr.David Sornabalan | 055 640 0635 |
| 29-07-2017 | Master.Dennis Roger | 050 449 1769 |

***On your birthday, We, the Church pray to Lord to bless you with wisdom, loyalty and generosity!***

***"Happy birth Day"***

## WEDDING ANNIVERSARIES JULY 2017

| | | |
|---|---|---|
| 05-07-2017 | Mr.Saman rajkumar<br>Mrs.Ceciliya Rajkumar | 050 322 7592 |
| 08-07-2017 | Mr.George Rose<br>Mrs.Anita George | 050 290 0809 |
| 12-7-2017 | Mr.David Liningston<br>Mrs.Beulah Rani Livingston | 050 543 2630 |

## WEDDING ANNIVERSARIES AUGUST 2017

| Date | Name | Contact |
|---|---|---|
| 18-08-2017 | Mr.Derick Gasbath Joy<br>Mrs. Sheeba derick | 05 667 7528 |
| 21-08-2017 | Mr.M.C.christopher<br>Mrs.Beeta Christopher | 056 710 5082 |
| 23-08-2017 | Mr.Jason Samuel<br>Mrs.Patricia Santhi | 056 257 8373 |
| 26-08-2017 | Mr.A.Yobu<br>Mrs.Anna Jothi | 050 838 6851 |

# BIRTHDAY CELEBRANTS AUGUST 2017

| Date | Name | Contact |
|---|---|---|
| 2/8/2017 | Mrs.Blessy Jose Jonish | 056 252 4659 |
| 3/8/2017 | Mr.D.Rajavel | 050 449 1769<br>055 9591 769 |
| 14-08-2017 | Master.Jeremiah Alan | 050 586 8173 |
| 15-08-2017 | Mr.Y.Mesiah Dhas | 050 543 1241 |
| 16-08-2017 | Mr. A.Derin Joy | 055 553 5200 |
| 18-08-2017 | Mr.Ezekiel Prasannaraj | 052 850 9598 |
| 20-08-2017 | Master.Alden Derick | 05 667 7528 |
| 28-08-2017 | Mrs.Augusta Lawrance | 056 641 1676 |
| 30-08-2017 | Mrs.Padma Alexis Joy | 050 221 8016 |
| 31-08-2017 | Mrs.Anitha Rajan | 050 586 8173 |

**"கர்த்தர் நம்மை நினைத்திருக்கிறார், அவர் ஆசீர்வதிப்பார்; இஸ்ரவேல் குடும்பத்தாரை ஆசீர்வதிப்பார், அவர் ஆரோன் குடும்பத்தாரை ஆசீர்வதிப்பார்".** (சங்.115:12)

***பிறந்த நாளையும், திருமண நிறைவுநாளையும் காணும் அனைவருக்கும் திருச்சபையின்சார்பில் அன்பின் வாழ்த்துக்கள்.***

# <u>மனைவியின் ஆசீர்வாதம்.</u>

***"உன் மனைவி உன் வீட்டோரங்களில் கனிதரும் திராட்சக்கொடியைப்போல் இருப்பாள்; உன் பிள்ளைகள் உன் பந்தியைச் சுற்றிலும் ஒலிவமரக் கன்று களைப் போல் இருப்பார்கள்".( சங் 128-3)***

எபேசியர் 5:22ல் மனைவிகளே கர்த்தருக்கு கீழ்படிகிறது போல உங்கள் சொந்த புருஷருக்கு கீழ்படியுங்கள் அடுத்து 24ம் வசனத்தில் சபையானது கிறிஸ்துவுக்கு கீழ்படிகிறது போல மனைவிகளும் தங்கள் சொந்த புருஷர்களுக்கு எந்த காரியத்தில் கீழ்படிந்திருக்க வேண்டும். இந்த கீழ்படிதலின் ஐக்கியம் 31ம் வசனத்தில் மனுஷன் தன் தாயையும் தகப்பனையும் விட்டு தன் மனைவியுடன் இசைந்து ஒரே மாம்சமாக இருக்கும் அனுபவத்தில் தான் அடங்கியிருகிறது என்று பவுல் குறிப்பிடுகிறார். மேலும் இந்த ஐக்கியத்திற்கு எதிராக இன்று குடும்பத்தினர் மனைவியையும் கணவனையும் தங்கள் கட்டுபாட்டுக்குள் கொண்டு வந்து தேவ கட்டளைகளுக்கு எதிர்த்து நிற்கிறார்கள். புருஷனிடத்தில் பயபக்தியாக இருக்க வேண்டிய மனைவி (33ம் வசனம்) கணவனுக்கு எதிர்த்து நிற்கிறாள். தன் மனைவியை சொந்த மாம்சமாக போதித்து நடத்தவேண்டிய கணவன் தன் மனைவியை அடிமையாக நடத்துகிறான்.

உன் மனைவி வீட்டோரங்களில் கனி தரும் திராட்சை கொடியை போல இருப்பாள் என்று சங்கீதகாரன் எழுதுகிறான். அதாவது மனைவியானவள் வீட்டில் மாத்திரமல்ல சுற்று புறத்திலும் இயேசு கிறிஸ்துவின் அன்பினை வெளிப்படுத்துகிறவளாக இருக்கவேண்டும். யோவான் 15ம் அதிகாரத்தில் நானே மெய்யான திராட்சை கொடி என் பிதா திராட்சை தோட்டக்காரர் என்று இயேசு கிறிஸ்து சொல்கிறார். மனைவி கிறிஸ்துவோடு அதாவது கிறிஸ்துவின் உபதேசத்தில் நிலைத்திருக்கும் போது அதிக கனி கொடுக்க முடியும். அடுத்ததாக கனி கொடாத கொடி எதுவோ அதை அவர்

அறுத்து போடுகிறார். இன்றைய காலகட்டத்தில் மனைவிமார்கள் கிறிஸ்துவின் உபதேசத்தில் நிலைத்திராமல் பிறரின் தவறான உபதேசங்களுக்கு செவி கொடுப்பதால் தேவனிடம் இருந்து வரும் ஆசீர்வாதத்தை பெற்று கொள்ளாமல் போகிறார்கள். எப்படியெனில் 16ம் வசனத்திலே என் நாமத்தினாலே பிதாவை கேட்டு கொள்வது எதுவோ அதை அவர் உங்களுக்கு கொடுக்கதக்கதாக நீங்கள் போய் கனி கொடுங்கள் அதற்க்காக உங்களை ஏற்படுத்தினேன் என்று இயேசு கிறிஸ்து சொன்னார். இன்றைக்கு பல குடும்பங்களில் ஜெபங்களுக்கு பதில் கிடைக்காததற்கு காரணம் இதுதான். நீதிமொழிகள் 31ம் அதிகாரம் 10 மற்றும் 11ம் வசனங்களில் குணசாலியான ஸ்திரியை கண்டுபிடிப்பவன் யார்? அவளுடைய விலை முத்துகளை பார்க்கிலும் உயர்ந்தது அவள் புருஷருடைய இருதயம் அவளை நம்பும். அவன் சம்பத்தும் குறையாது ஒரு குணசாலியான மனைவியினால் அந்த குடும்பம் ஆசீர்வாதத்தை சுதந்தரித்து கொள்கிறது. அந்த குடும்பத்தில் சம்பத்து குறைவுபடுவதில்லை என்று கர்த்தருடைய வேதம் சொல்கிறது.

மனைவிமார்களே! ஒரு வேளை நீங்கள் என் கணவன் முரட்டாட்டம் உள்ளவன் அவனோடு வாழமுடியாது என்று சொல்லலாம் ஆனால் நீங்கள் மாம்சத்தோடும் ரத்தத்தோடும் போராடுவதினால் உங்கள் கணவனை ஆதாயப்படுத்தி கொள்ள முடியாமல் போகலாம். நம் போராட்டம் (யுத்தம்) மாம்சத்தோடும் ரத்தத்தோடும் இல்லை எனவே பவுல் சொல்வது போல இன்றைக்கு அநேக மனைவிமார்கள் தாங்கள் தேவனை சார்ந்து வாழாமல் (செடியோடு இணைந்திருக்காமல்) மனித ஆலோசனைகளை நாடி அதை செயல்படுத்துவதால் பொறுமையை இழந்து சமாதானத்தை பெற்று கொள்ளாமல் போகிறார்கள். மேலும் தேவன் குடும்பங்களில் வைத்துள்ள உன்னத ஆசீர்வாதத்தை பெற்று கொள்ளாமல் போகிறார்கள் இயேசு கிறிஸ்து சொன்னார் ஒருவன் உனக்கு விரோதமாக குற்றம் செய்தால் ஏழு எழுபது தடவை மன்னிக்க வேண்டும் என்றார். ஆனால் மனைவிமார்களும் கணவன்மார்களும் பிறர் செய்த தவறுகளை எளிதாக உடனே மன்னித்துவிடுகிறார்கள்

ஆனால் தங்கள் குறைகளை ஒருவருக்கொருவர் மன்னிப்பதில்லை ஏனென்றால் இவர்களிடம் தாழ்மை இல்லை. இயேசு கிறிஸ்து சொன்னார் நான் சாந்தமும் மனத்தாழ்மையு மாயிருக்கிறேன் என் நுகத்தை உங்கள் மேல் ஏற்று கொள்ளுங்கள் இது தான் இயேசு கிறிஸ்துவாகிய திராட்சை செடியில் நிலைத் திருக்கும் உன்னத அனுபவம். இப்படிபட்ட மனைவிமார்கள் தான் வீட்டோரங்களில் இருக்கும் திராட்சை செடியை போல கனி கொடுப்பவர்கள். இவர்கள் தான் 1பேதுரு 4ம் வசனத்தில் சொல்லப்பட்ட அழியாத அலங்கரிப்பாகிய சாந்தமும் அமைதலுள்ள ஆவியும் உடையவர்களாக இருந்து உலகத்தை சுதந்தரிக்கிறார்கள்.

அடுத்து, 1பேதுரு 3:1-2ல் அந்தப்படி மனைவிகளே உங்கள் சொந்தப் புருஷர்களுக்குக் கீழ்ப்படிந்திருங்கள். அப்பொழுது அவர்களில் யாராவது திருவசனத்திற்குக் கீழ்ப்படியாதவர்களா யிருந்தால், பயபக்தியோடு கூடிய உங்கள் கற்புள்ள நடக்கையை அவர்கள் பார்த்து, போதனையின்றி, மனைவிகளின் நடக்கை யினாலேயே ஆதாயப்படுத்தி கொள்ளப்படுவார்கள். இங்கு சொல்லப்பட்ட வசனத்தின் படி வசனத்துக்கு கீழ்படியாதவர்கள் பயபக்தியோடு கூடிய மனைவியின் கற்புள்ள நடக்கையை பார்த்து மனைவியால் ஆதாயப்படுத்தப்படுவார்கள். மனைவிமார்களே, தேவன் குடும்பமாய் உங்களுக்கு பெரிய ஊழியத்தை கொடுத்திருக்கிறார் உங்களுக்கு கொடுக்கப்பட்ட ஊழியத்தை உண்மையும் உத்தமுமாக செய்யுங்கள். உங்கள் கணவர், பிள்ளைகள் மற்றும் குடும்பத்தாரை உங்கள் நடக்கையினாலே கர்த்தருக்கு ஆதாயப்படுத்துங்கள்.

பிரியமானவர்களே தேவ சமூகத்தில் ஜெபித்து தேவ ஆலோசனையை பெற்று கொள்ளுங்கள் நம் தேவன் ஆலோசனை கர்த்தர் எனவே மனைவிமார்களே, கணவன்மார்களே நம்மை நாம் நிதானித்து அறிய கற்றுக் கொள்வோம். தேவன் நமக்கு கொடுத்து கீழ்படிய சொன்ன கட்டளைகளுக்கு கீழ்படிந்து நடப்போம். தேவனுக்கு முன்பாக தேவ சபையில் நம் மனைவியோடு

கணவனோடு செய்யப்பட்ட உடன்படிக்கைக்கு விரோதமாக எதிர்த்து நிற்காதிருப்போம். நமக்கும் நியாயம் தீர்க்கப்படும் காலம் ஒன்று வருகிறது. குடும்பத்தில் நம் இருவருக்குள் உள்ள ஐக்கியத்திற்கு எதிராக செயல்பட கூடிய மனிதர்களானாலும் சரி பொருள்களானாலும் சரி எல்லாவற்றையும் அப்புறப்படுத்துவோம்.

அடுத்ததாக நம்மை தாழ்த்துவோம் அப்பொழுது ஒரு பரலோகத்தின் சந்தோஷம் வம் வீடுகளில் கடந்து வரும். அதன் பிறகு நமக்கு கிடைக்கும் அளவில்லா தேவ ஆசீர்வாதத்தை நாம் ஒவ்வொருவரும் அனுபவிப்போம்.

ஆன்பானவர்களே! கர்த்தருக்குள் மனமகிழ்ச்சியாக இருங்கள் என்று வேதம் சொல்கிறது நம் குடும்பத்தில் ஐக்கியமும், ஒருமனமும் காணப்படுமானால் நாம் ஜெபிக்கும் போது எங்கே எனது நாமத்தினாலே இரண்டோ மூன்றோ பேர்கள் கூடியிருக்கிறார்களோ அவர்கள் நடுவில் நான் (இயேசு கிறிஸ்து) இருக்கிறேன் (மத்தேயு 18:20) என்ற வாக்குதத்தத்தின் படி அவர் நம்மோடு வாசம் பண்ணி நம் தேவைகளை சந்திப்பார். அல்லேலூயா.

## தேவன் மேல் பழி போடலாமா?

ஒரு தாய் தனது ஐந்து வயது மகனை கூட்டிக் கொண்டுபொருட்காட்சி பார்க்கப்போனார்கள். பல்வேறு கடைகளில் அவர்கள் பலூன்கள், விளையாட்டுப் பொருள்கள், இனிப்புகள் வாங்கிக்கொண்டு குடை ராட்டினத்திலும் பையனை ஏற்றி மகிழ்வித்தார்கள். தாய் எப்பொழுதும் பையனை கையில் பத்திரமாக பிடித்துக் கொள்வார்கள். ஆனால் அவன் அங்குள்ள பல ஸ்டால்களைப் பார்த்து பரவசமடைந்து அவ்வப்போது தப்பி ஓடிவிடுவான். ஒரு சமயம் அப்படி வேடிக்கைப் பார்த்துக் கொண்டே அவன் சென்றபோது அந்தக்

கூட்டத்தில் காணமல் போய்விட்டான். சுமார் ஒரு மணி நேரம் கழித்து பையன் கிடைத்துவிட்டான். அவன் தாயைப் பார்த்து: “என்னை விட்டு விட்டு எங்கே காணாமல் போய்விட்டீர்கள்” என்று கேட்டான். இது போலத்தான் மனிதர்களாகிய நாமும் இறைவனை விட்டுத் தூரம் போய் காணாமல் போய்

விடுகிறோம். நாம்,நம்முடைய தவறுகளை, குற்றங்களை உணராமல் நமது தவறுகளால் குற்றங்களால் உண்டாகும்

கஷ்டங்களுக்கு கடவுளை குறை சொல்லி, தேவனே, ஏன் என்னைக் கைவிட்டீர்என்று ஜெபிக்கிறோம்.

இன்றைக்கு இப்படி குறை சொல்லுகின்ற நிலைமை குடும்பத் திலும், திருச்சபையிலும் பார்க்கிறோம். இப்படி ஒருவரையொருவா் குற்றம் சொல்லும்போது நிலைமை மோசமாகி கசப்பு உணர்வும், கோபமும், வைராக்கியமும் வருகிறது. முடிவிலே தேவ பிரசன்னத்தை அவர்களால் உணர முடியாமல் போய்விடுகிறது.

“ஆகையால், மற்றவர்களைக் குற்றவாளியாகத்
தீர்க்கிறவனே, நீ யாரானாலும் சரி, போக்குச் சொல்ல உனக்கு
இடமில்லை. (ரோமர் 2:1)

*M. Nesamony*

## தேவனே ஏன் இப்படி?

- என்னை ஏன் பலவீனப்படுத்திவிட்டீர்?
  நீ என் பலத்தை சார்ந்து வாழப் பழகிக் கொள்வதற்காக.

- எனக்கு ஆதரவானவர்களை ஏன் அப்புறப்படுத்தினீர்?
  நிலையற்ற மனிதர்களை சார்ந்து வாழ்வது சரியல்ல என்பதால்.

- குழப்பமான சூழ்நிலைகளை ஏன் அனுமதிக்கிறீர்?
  தெளிவான முடிவுகளை எடுக்கும் பயிற்சியைப் பெறுவதற்காக.

- நான் கேட்டதையெல்லாம் நீர் ஏன் தரவில்லை?
  உனக்கு எது தேவையோ அதை மட்டுமே நான் தரவிரும்புவதால்.

- அநீதியாளர்களை ஏன் எனக்கெதிராக ஜெயிக்கவிட்டீர்?
  நீதியினிமித்தம் துன்பப்படுவது அவசியமென்பதால்.

- விசுவாசித்துக் கேட்டவைகளை நீர் அருளவில்லையே?

  சரியானவைகளை நீ விசுவாசித்துப் பழகுவதற்காக.

- மற்றவர்களை மாற்றாமல் என்னையே நீர் மாறச்சொல்கிறீரே?

  என்னை நேசிக்கிறவர்களைத்தான் நான் மாற்ற விரும்புகிறேன்

- அவசியமான சில நன்மைகளை நீர் தரவில்லையே.

  மிகத் தேவையான சில இல்லாமலும் நீ வாழப் பழக வேண்டும்.

- என் நல்ல திட்டங்களை நீர் தோல்வியடையச் செய்தீரே?
  அதைவிட நல்ல திட்டங்களை உனக்காக நான் வைத்திருப்பதால்.

- வேறு சிலருக்கு நீர் அளித்த உயர்வை எனக்கு நீர் தரவில்லையே?
  அவர்களின் அழைப்பு வேறு, உன் அழைப்பு வேறு என்பதால்.

- நீண்டகாலம் என்னை காக்க வைத்துவிட்டீரே?
  நான் தரும் நன்மைகள் உன்னிடம் நிலைத்திருக்க அந்த அனுபவம் அவசியம்.


- நான் மட்டும் சிறு தவறு செய்தாலும் தண்டித்து விடுகிறீரே?

என் பிள்ளையிடம் சிறு தவறும் இல்லாத பரிசுத்த வாழ்வை விரும்புவதால்.

- என்னுடைய பல கேள்விகளுக்கு நீர் பதில் தருவதேயில்லை?

நீ விளக்கங்களை சார்ந்தல்ல, விசுவாசத்தைச் சார்ந்து வாழ்வதற்காக.

*தொகுப்பு.*
*M.நேசமணி.*



## DAILY BIBLE READING - JULY - 2017

| Date | Day | Morning | Evening |
|---|---|---|---|
| 1 | Sat | Math 11 | Isaiah 63 |
| 2 | Sun | Math 12 | Isaiah 64 |
| 3 | Mon | Math 13 | Isaiah 65 |
| 4 | Tue | Math 14 | Isaiah 66 |
| 5 | Wed | Math 15 | Jeremiah 1 |
| 6 | Thu | Math 16 | Jeremiah 2 |
| 7 | Fri | Math 17 | Jeremiah 3 |
| 8 | Sat | Math 18 | Jeremiah 4 |
| 9 | Sun | Math 19 | Jeremiah 5 |
| 10 | Mon | Math 20 | Jeremiah 6 |
| 11 | Tue | Math 21 | Jeremiah 7 |
| 12 | Wed | Math 22 | Jeremiah 8 |
| 13 | Thu | Math 23 | Jeremiah 9 |
| 14 | Fri | Math 24 | Jeremiah 10 |
| 15 | Sat | Math 25 | Jeremiah 11 |
| 16 | Sun | Math 26 | Jeremiah 12 |
| 17 | Mon | Math 27 | Jeremiah 13 |
| 18 | Tue | Math 28 | Jeremiah 14 |
| 19 | Wed | Mark 1 | Jeremiah 15 |
| 20 | Thu | Mark 2 | Jeremiah 16 |
| 21 | Fri | Mark 3 | Jeremiah 17 |
| 22 | Sat | Mark 4 | Jeremiah 18 |
| 23 | Sun | Mark 5 | Jeremiah 19 |
| 24 | Mon | Mark 6 | Jeremiah 20 |
| 25 | Tue | Mark 7 | Jeremiah 21 |
| 26 | Wed | Mark 8 | Jeremiah 22 |
| 27 | Thu | Mark 9 | Jeremiah 23 |
| 28 | Fri | Mark 10 | Jeremiah 24 |
| 29 | Sat | Mark 11 | Jeremiah 25 |
| 30 | Sun | Mark 12 | Jeremiah 26 |
| 31 | Mon | Mark 13 | Jeremiah 27 |

## DAILY BIBLE READING - August - 2017

| Date | Day | Morning | Evening |
|---|---|---|---|
| 1 | Tue | Mark 14 | Jeremiah 28 |
| 2 | Wed | Mark 15 | Jeremiah 29 |
| 3 | Thu | Mark 16 | Jeremiah 30-31 |
| 4 | Fri | Psalm 1-2 | Jeremiah 32 |
| 5 | Sat | Psalm 3-4 | Jeremiah 33 |
| 6 | Sun | Psalm 5-6 | Jeremiah 34 |
| 7 | Mon | Psalm 7-8 | Jeremiah 35 |
| 8 | Tue | Psalm 9 | Jeremiah 36 |
| 9 | Wed | Psalm 10-11 | Jeremiah 37 |
| 10 | Thu | Psalm 12-13 | Jeremiah 38 |
| 11 | Fri | Psalm 14-15 | Jeremiah 39 |
| 12 | Sat | Psalm 16 | Jeremiah 40 |
| 13 | Sun | Psalm 17 | Jeremiah 41 |
| 14 | Mon | Psalm 18 | Jeremiah 42 |
| 15 | Tue | Psalm 19 | Jeremiah 43 |
| 16 | Wed | Psalm 20-21 | Jeremiah 44 |
| 17 | Thu | Psalm 22 | Jeremiah 45 -46 |
| 18 | Fri | Psalm 23-24 | Jeremiah 47 |
| 19 | Sat | Psalm 25 | Jeremiah 48 |
| 20 | Sun | Psalm 26-27 | Jeremiah 49 |
| 21 | Mon | Psalm 28-29 | Jeremiah 50 |
| 22 | Tue | Psalm 30 | Jeremiah 51 |
| 23 | Wed | Psalm 31 | Jeremiah 52 |
| 24 | Thu | Psalm 32 | Lamentation 1 |
| 25 | Fri | Psalm 33 | Lamentation 2 |
| 26 | Sat | Psalm 34 | Lamentation 3 |
| 27 | Sun | Psalm 35 | Lamentation 4 |
| 28 | Mon | Psalm 36 | Lamentation 5 |
| 29 | TUE | Psalm 37 | Ezekiel 1 |
| 30 | WED | Psalm 38 | Ezekiel 2 |
| 31 | THU | Psalm 39 | Ezekiel 3 |

## WORSHIP TIMIGS - July & August 2017
## MAIN WORSHIPHALL
## OASIS HOSPITAL COMPOUND
## AL AIN

| | | |
|---|---|---|
| First and Third Fridays | 7:00 PM | Communion Service |
| Second & Fourth Fridays | 7:00 PM | Regular Service |
| Second & Fourth Fridays | 6.30 PM | Bible Study |

## REGULAR MINISTRIES
## Personage - Al Jahili

| | | |
|---|---|---|
| Second Saturdays | 07.30 PM | Women's Prayer |
| Third  Saturdays | 07.00 PM | Men's Prayer |
| Fourth Saturdays | 0700 PM | Gospel Ministry |

# விசுவாசத்தை புதுப்பித்தல்

**"கிறிஸ்து இயேசுவைப் பற்றும் விசுவாசத்தினாலே உன்னை இரட்சிப்புக்கேற்ற ஞானமுள்ளவனாக்கத்தக்க பரிசுத்த வேத எழுத்துக்களை, ....." (2 தீமோ.3:15)**

*ஒருமுறை மகா அலெக்சான்டர் போர் ஓய்ந்த நிலையில், தன்னிடம் உள்ள பொருட்களை தன் நண்பர்களுக்குப் பரிசாகக் கொடுத்துக் கொண்டேயிருந்தார். அவருடைய பெருந்தன்மையால் தன்னிடம் உள்ள அனைத்தையும் பிறருக்குக் கொடுத்தார். இதைப் பார்த்த அவரின் நண்பர்களில் ஒருவன், அரசே இப்படியே கொடுத்துக் கொண்டிருந்தால் நீர் அனைத்தையும் இழந்து விடுவீர், உம்மிடம் ஒன்றும் இராது என்றார். அதற்கு மகா அலெக்சான்டர் புன்முறுவலுடன், நான் அனைத்தையும் இழந்தாலும் என்னிடம் ஒன்று மட்டும் நிலைத்திருக்கிறது. அது தான் கடவுள் மீது நான் வைத்துள்ள விசுவாசம் எனப் பதிலளித்தாராம்.*

கிறிஸ்தவர்களின் வாழ்விலே விசுவாசம் இன்றியமையாதோர் பண்பாகும். வாழ்விலே கிறிஸ்துவுக்குச் சான்று பகர்ந்து வாழ்ந்திடவும், வாழ்விலே கிறிஸ்து தரும் நன்மைகளைப் பெற்றிடவும் விசுவாச வாழ்வே மிக இன்றியமையாதது. அது மட்டுமல்ல, நமது வாழ்வைச் சீர்ப்படுத்த, ஒழுங்குபடுத்த விசுவாசம் நமக்குப் பெரிதும் துணை செய்கிறது.

பல கிறிஸ்தவர்கள் கடவுள் மீது கொள்ளும் விசுவாசத்தை நாளடைவில் குறைத்து விடுவதுண்டு. அவிசுவாசிகளாகவும் மாறி

விடுவதுமுண்டு. ஆண்டவர் இயேசுவோடு வாழ்ந்து, அவரின் ஆற்றலை அறிந்து, அற்புத அடையாளங்களைக் கண்ணால் கண்ட ஒருவர் பேதுரு. இயேசு கடல் மீது நடப்பதைக் கண்டு தானும் நடக்க விரும்பினார். ஆனால் அவரோ அலையைக் கண்டு பயந்து நடுங்கி அலறினார், இயேசுவோ, **“அற்பவிசுவாசியே ஏன் சந்தேகப்படுகிறாய்”** என்றார். அவ்வாறே தோமாவின் அவிசுவாசத்தைக் கண்ட இயேசு கிறிஸ்துவும், **“அவிசுவாசியாய் இராமல் விசுவாசியாயிரு”** என்கிறார்.

இந்தச் செய்திகள் அனைத்தும் நமக்கு கற்றுத்தரும் உண்மை, மானிட வாழ்வு சீர்பெற்றிட கடவுள் மீது நாம் கொண்டுள்ள விசுவாசத்தைத் தினமும் புதுப்பித்துக் கொண்டு, வளர்ந்து கொண்டேயிருக்க வேண்டும் என்பதாகும். நாம் நமது விசுவாசத்தைப் புதுப்பிக்கும் போது நாம் நீதிமான்களாக மாற்றப்படுவோம். எனவே விசுவாசத்தை தினமும் புதுப்பித்து நம்மை, நம் வாழ்வை, நம் மூலம் பிறரை சீர்ப்படுத்துவோம்.

**சிந்தனைக்கு** : *விசுவாசத்தினால் நீதிமான் பிழைப்பான்.*

**Compiled**

# ஜெபிப்போம் !!!!!

- ஆயர் திருச்சபைக்காரியக்குழு திருச்சபை உறுப்பினர்களுக்காக
- இந்தியாவிலும் ஐக்கிய அரபுக் குடியரசிலும் நம்மை ஆளும் தலைவர்களுக்காக

- நமது தென் இந்திய திருச்சபைக்காகவும் தென் இந்திய ததிருச்சபையின் பிரதமபேராயர் மற்றும் அனைத்து பேராயர்கள் ஆயர்கள் ஊழியர்கள் போன்றோருக்காக

- நம் திருச்சபையின் இதர ஊழியங்களுக்காக

- இவ்வருடத்தில் நடைபெறும் எல்லா ஆராதனைகளையும் கூடுகைகளையும் தேவன் ஆசீர்வதித்திட

- புதிய அங்கத்தினர்களை தேவன் நம் சபைக்கு தருமாறு

- நம் திருச்சபையின் அங்கத்தினர் அனைவரையும் ஆண்டவர் ஆசீர்வதிக்கவும் ஆண்டவரால் பத்திரமாக பாதுகாக்கப்படவும

- விசாவுக்காக வேலைக்காக ஊதியத்திற்காக காத்திருக்கும் மக்களுக்கு ஆண்டவர் சரியான நேரத்தில் அவைகளை வழங்கும்படியாக

- தனிமையாய் இந்த தேசத்திலிருக்கும் நம் திருச்சபையின் உறுப்பினர்களுக்காகவும் குறிப்பாக தங்கள் பெற்றோர் மனைவி பிள்ளைகளை விட்டு தனியாக தங்கியிருக்கும் நம் அன்பு சகோதரர்களுக்காகவும் அவர்களின் பெற்றோர் மனைவி பிள்ளைகள் சகோதர சகோதரிகள் அனைவருக்காகவும்

- இந்தியாவிலிருக்கும் நமது பெற்றோர் மற்றும் நமக்குரியவர்கள் அனைவருக்காகவும்

- நமது திருச்சபை தாங்கும் நமது மிஷனரிகட்காக